

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | மார்ச் 03, 2022 | புரட்சி 21 | முழக்கம் 07 | விலை: ரூ.3.00

# தீட்சதர்கள் அத்துமீறல்களைக் கண்டித்து தில்லையில் ஆர்ப்பாட்டம்

சிதம்பரம் நடராசர் கோவிலில், சிற்றம்பல மேடையில் நின்று வழிபாடு நடத்திய பெண்ணை தீட்சிதர்கள் தாக்கினார்கள். தீட்சிதர்கள் 20 பேர் மீது வழக்கு பதிவும் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், சிதம்பர நடராஜர் கோவில் திருச்சிற்றம்பல மேடையில் அனைத்து சாதியினரையும் வழிபாடு நடத்த அனுமதிக்க கோரி, மக்கள் உரிமை கூட்டமைப்பு சார்பாக சிதம்பரம், காந்தி சிலை அருகில் பிப்.28ஆம் தேதி மாலை 3 மணியளவில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் தோழமை அமைப்புகளின் தலைவர்கள் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார்கள்.

கழகத் தலைவர் செய்தியாளர்களிடத்தில், “தமிழ்நாட்டில், அறநிலையத் துறைக்கு கட்டுப்படாத, அரசுக்கு கட்டுப்படாத எந்த சட்டத்திற்கும் கட்டுப்படாத இடமாக இந்த சிதம்பரம் நடராசர் கோவில் இருந்து வருகிறது. இங்கு மனித உரிமை மீறல்கள் மட்டுமல்ல சமய உரிமைகளும் இங்கு மீறப்பட்டிருக்கிறது. வழிபாட்டுக்குச் சென்றவர்கள் தாக்கப்படுகிறார்கள், தேவாரம் பாட சென்றவர் தாக்கப்பட்டிருக்கிறார். இந்த நிலையில் சிதம்பரம் நடராசர் கோவிலும், அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் வர வேண்டும். தற்போது கோவிலில் உள்ள அர்ச்சகர்கள் முறையாக பயிற்சி பெற்றவர்களா என்பதையும் சரிபார்க்க வேண்டும். இல்லை என்றால், முறையாக பயிற்சி பெற்றவர்களை நியமிக்க வேண்டும். எங்களைப் போன்ற இயக்கங்கள் மட்டுமல்லாமல் கடவுள் நம்பிக்கையுள்ள மக்களும் இதை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்" என்று தெரிவித்தார்.

மக்கள் ஒருங்கிணைப்பு கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர், வழக்கறிஞர் த.தயாநிதி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மக்கள் உரிமைக்கான கூட்டமைப்பு செயலாளர் விடுதலையாளன் முரளி வரவேற்பு கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில், தமிழ்மண் தன்னுரிமை இயக்கம் பேராசிரியர் த.ஜெயராமன், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் பொதுச்செயலாளர் நிலவழகன், தமிழர் உரிமை இயக்கத்தின் அமைப்பாளர் சுப்பு மகேஷ், விடுதலைத் தமிழ்ப் புலிகள் கட்சித் தலைவர் குடந்தை அரசன், தமிழ் தேசிய போராளி ஆலப்பாக்கம் முருகேசன், பெரியார் சிந்தனையாளர் இயக்கம் தீனா உள்ளிட்ட பல இயக்கத்தைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டு கண்டனத்தை பதிவு செய்தனர்.

இறுதியாக, திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் பிரகாஷ் நன்றி கூறினார். தொடர்ந்து, பல்வேறு அமைப்புகள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றன.

தில்லை கோயில் ‘பலி பீடமாக’ இருந்திருக்கிறது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு. பேராசிரியர் ஆ.சிவசுப்ரமணியம் ‘கோபுரத் தற்கொலைகள்’ நூலில் கீழ்க்கண்ட செய்தியைப் பதிவு செய்துள்ளார்.

> பதினாறாம் நூற்றாண்டில் செஞ்சியை ஆண்ட கிருஷ்ணப்பநாயக்கர், சிதம்பரம் நடராசர் கோவிலில் இருந்த தில்லைக் கோவிந்தன் கருவறையைச் செப்பனிடும் வேலைகளைச் செய்தார். பெருமாளின் உருவத்தை அங்கு வைக்கக் கூடாதென்று சைவர்கள் எதிர்த்தனர். இவ்வெதிர்ப்பின் உச்சகட்டமாகக் கோவிலில் தீட்சிதர்கள் சிலர் கோவில் கோபுரத்தில் ஏறி, கீழே விழுந்து உயிர் துறந்தனர். இதனால் உத்வேகம் பெற்ற பெண் ஒருத்தி தன் கழுத்தை அறுத்துக் கொண்டாள். ஆனாலும், கிருஷ்ணப்ப நாயக்கர் திருப்பணியைச் செய்து முடித்தார். 1597 இல் இதை நேரில் கண்டதாக பிமெண்டோ என்ற சேசுசபைத் துறவி தம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.
>
> (பரந்தாமனார் 1966:423-424)

தில்லை நடராசன் ‘நடன கோலத்தில்’ தோற்றமளிப்பதற்கான காரணங்களை அக்னிஹோத்திரம் இராமானுஜ தாதாச்சாரி இந்து மதம் எங்கே போகிறது என்ற நூலில் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்.

## ‘நடராஜன்’ திருத்தாண்டவப் பின்னணி என்ன?

சிதம்பரம் நடராஜ பெருமானை எல்லாரும் அறிந்திருப்பீர்கள். உங்களில் சிலபேர் அவரது ஆலயத்துக்கு சென்று தரிசனமும் செய்திருப்பீர்கள். இந்த ஸ்தலத்திற்கு விசேஷமே சிவபெருமானான நடராஜ பெருமானின் நர்த்தனம்தான். ஒருநாள், மிகப்பழைய காலத்தின் அழகான நாள், சிதம்பரத்தில் ஒரு போட்டி. நடனப்போட்டி. கலந்து கொள்பவர்கள் யார், யார்?

பரமசிவன், தில்லை காளி.

யாரிந்த தில்லை காளி ? சிவபெருமானுடன் நடனப்போட்டி போட வந்தவள். மிகச்சிறந்த நர்த்தன நாட்டியக்காரி. இயற்கையிலேயே ஆண்களைவிட பெண்கள் தான் நடன அசைவுகளிலும் இசைத் துடிப்புகளிலும் அழகாக இழைவார்கள்.

புருஷர்கள் ஆடும்போது ஏற்படும் ரசனையைவிட ஸ்திரீகள் நர்த்தனமாடும்போது அதிகபட்ச அழகு மிளிரும். இது இயற்கையின் ஏற்பாடு. அதிலும்... தில்லைகாளி நடனப்பயிற்சி பெற்றவள். பின் சொல்ல வேண்டுமா?

அவளது சலங்கை ஒலி கேட்டு காற்றே ஆடிப் போகும்; அவளது நடனத்துக்குப் போட்டியாக ஆடவருபவர்களே ஆடிப் போய் விடுவார்கள்.

இப்படிப்பட்ட தில்லை காளிதான் சிவபெருமானின் நடனப் போட்டிக்கு வந்தாள். ஏற்பாடுகள் நடந்தன. இரண்டு மேடைகள் எதிரெதிரே. அதில்தான் சிவபெருமானும் காளியும் நடமாட வேண்டும்.

கூட்டம் கூடியிருக்கிறது. ஆட்டம் தொடங்க இருக்கிறது. போட்டியில் யார் ஜெயிப்பார்கள் என கூடியிருந்தவர்களிடையே ஒரு கிசு கிசு பேச்சு நுழைந்து நெளிந்துகொண்டிருந்தது.

தொடங்கியாகிவிட்டது தனது ஆர்ப்பாட்டமான அசைவுகளோடு ஆட ஆரம்பித்தாள் காளி. அவளது பாதங்கள் சலங்கைகளை ஒலியோடு சுருதி சேர்த்தன. காளியின் கை விரல்கள் காற்றில் நடனச் சித்திரங்கள் தீட்டின. மறுபக்கம் சிவன் தனது தாண்டவத்தை ஆரம்பித்தார். சிவனின் தாண்டவத்தை அய்ந்து வகையாக அவரது அடியார்கள் போற்றுவர். அற்புத தாண்டவம், அநவாத தாண்டவம், அற்புத தாண்டவம், பிரளய தாண்டவம், சங்கார தாண்டவம். இங்கே சிவன் ஆடியது ஆனந்த தாண்டவம்.

காளியின் நடன அசைவுகளும் நர்த்தன நுட்பங்களும் பார்ப்பவர்களை வசீகரித்தன. சிவனின் தாண்டவம் காளியின் தாண்டவம் முன்பு தோற்றுவிடும் நிலைமை..

பார்த்தார் சிவபெருமான். ஒரு பெண்ணிடம் நான் தோற்பதா ? அவள் கால்கள் செய்யும் நடனம் அவருக்குள் கலகம் செய்தது. ’ஆஹா... சிவபெருமானை தில்லை காளி ஜெயித்துவிட்டாளே’ என குரல்கள் கிளம்பப் போகிற நேரம்..

இனியும் இவளை ஆடவிடக்கூடாது என முடிவுகட்டிய சிவன்... தன் இடதுகாலை சற்றே தூக்கினார். நடனத்தின் ஒருவகைதான் என ஈடு கொடுத்து ஆடிக் கொண்டிருந்தாள் காளி. சிவனின் இடது கால் இன்னும் எழும்பியது. ஆமாம்... இன்னும் உயரமானது. கொஞ்சம் கொஞ்சமாக இடது காலை விலக்கி எடுத்துச் சென்ற சிவபெருமானின் திட்டம் பலித்தது.

வலது காலை ஊன்றி இடது காலை உயர விலக்கிக்கொண்டே போக... சபையே ஒரு கணம் அதிர்ந்தது. ஏன்...? வேண்டுமென்றே சிவனின் சிஷ்டம் (அதாவது ஆணுறுப்பு) வெளியே தெரியும்படி ஆனது. இதற்காகத்தான் இடது காலை விலக்கி தூக்கியிருக்கிறார் சிவன்.

வெற்றியின் விளிம்பில் நடனமாடிக் கொண்டிருந்த தில்லை காளி இக்காட்சியை பார்க்க வேண்டிய கட்டாயம் நேர்ந்துவிட்டது. பொட்டென அவளது நர்த்தனம் நின்றது. தலைகுனிந்தாள். தனக்கு முன் ஒரு ஆண் இப்படிப்பட்ட கோலத்தில் நிற்பதை எந்தவொரு பெண் பார்த்துக்கொண்டே தன் வேலையை தொடருவாள் ?

காளியின் நர்த்தனம் நின்றதா ? நிறுத்தப்பட்டது. ஆனால் சிவபெருமான்.... தாண்டவமாடிக்கொண்டே இருந்தார். ஆக, சிவன் ஜெயித்தார் என்றாகிவிட்டது.

வலது காலை ஊன்றி இடது காலை தூக்கி சிஷ்டத்தை வெளிக் கொண்டு வந்து ஜெயித்துவிட்டார். இதுதான் சிதம்பர இரகசியமோ என்னவோ ?

இப்படி ஜெயித்த பிறகுதான் சிவனுக்கு நடராஜர் என்ற நாமமே உண்டானது. இதற்கு நடனத்தில் ராஜா என்று அர்த்தம்.

இதை நான் சொல்லவில்லை. நடராஜ மகாத்மியம் என்னும் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது சிதம்பரம் சொல்லும் செய்தி என்ன ?

ஆணிடம் பெண் போட்டி போடக்கூடாது. அப்படியே திமிராக போட்டி போட்டாலும் ஜெயித்துவிடக்கூடாது. அவளை தோற்கடிக்க ஆண் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

தோற்றவள் காளி. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். காளி, ஆகமத்துக்கு அப்பாற்பட்டவள் காவல் தெய்வம். இங்கேதான் முக்கியமான இன்னொன்றை கவனிக்க வேண்டும். “Siva is a high class God. But Kali is a low class rural God” என்று காளி ஒதுக்கப்பட்டாள். எங்கே ?

இன்னமும் நீங்கள் சிதம்பர நடராஜர் கோயிலுக்குப் போய் தில்லை காளி எங்கே என்று கேளுங்கள். கோயிலுக்கு வெளியே வடக்கு நோக்கி கை காட்டுவார்கள்.

கிட்டத்தட்ட 1 கிலோமீட்டர் தூரத்தில் சிதம்பரத்தின் எல்லையில் ஒரு சின்ன கோயிலுக்குள் கோபமாக உட்கார்ந்திருப்பாள் காளி.

‘அதாவது ஆணுக்கு பெண் போட்டி போட முடியாது. போட்டியிட்டால் இப்படித்தான் விரட்டப்படுவாள்’ என்று நமக்கு நடராஜர் மூலம் சொல்லாமல் சொல்லிக்கொண்டிருக்கிறாள் காளி. **இன்னும் சிதம்பரம் கோவிலில் அர்ச்சனையில் ஈடுபடும் தீட்சிதர்கள் அக்காளியை திரும்பிக்கூட பார்ப்பதில்லை.**

இவ்வாறு தெய்வங்களுக்கிடையே ஆண் - பெண் பேதம் போற்றி வளர்க்கப்பட்டிருக்கிறது. அதோடு வர்க்க பேதமும் பின்பற்றப்பட்டிருக்கின்றன.

– ‘இந்து மதம் எங்கே போகிறது’ நூலிலிருந்து

தலையங்கம்

## அறநிலையத் துறையில் தடுமாற்றம்

சிவன் கடவுளுக்காக இரவு முழுதும் கண் விழிக்கும் 'மகா சிவராத்திரி' என்ற இந்துமதம் தொடர்பான ஒரு சடங்கை அறநிலையத் துறை மக்கள் விழாவாக மாற்றி ஆன்மீகப் பிரச்சாரங்கள் கலை நிகழ்வுகள் நிகழ்த்தி விடிய விடிய நடத்தப் போவதாக தமிழக அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு அறிவித்தார். அறநிலையத் துறையின் வேலை, கோயில் பாதுகாப்பு மற்றும் கோயில் குடமுழுக்கு பூஜை சடங்குகளை நடத்துவதற்கு உதவுதல் தானே தவிர, மதத்தை மக்களிடம் பரப்புரை செய்வது அல்ல என்ற முதல் எதிர்ப்புக் குரலை திராவிடர் விடுதலைக் கழகம் எழுப்பியது. முகநூல்களில் கருத்துக்கு வலிமையான ஆதரவுகள் வெளிப்பட்டன. மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியை 'ஆன்மீக சுற்றுலா மய்யமாக' மாற்றப் போவதாக தொகுதி சட்டமன்ற தி.மு.க. உறுப்பினர் தேர்தல் பரப்புரையில் அறிவித்தார். அதன் ஒரு பகுதியாக இந்த நிகழ்வும் அரங்கேற்றப்படவிருந்தது.

தூய்மை நகரம், தொற்று நோய் இல்லாத நகரம், குற்றங்கள் குறைந்த நகரம் என்ற அறிவிப்புகளில் நியாயம் இருக்கிறது. 'ஆன்மீக பூமியாக' மயிலாப்பூர் எப்படியாக முடியும்? அங்கே வேத குலத்தில் பிறந்த 'பிராமணர்கள்' அதிகாரச் செல்வாக்குடன் காலம் காலமாக வாழ்வதாலேயே ஆன்மீக பூமியாகிவிட முடியுமா? இராயபுரம், வண்ணாரப்பேட்டை, சைதாப்பேட்டை ஆன்மீக பகுதிகள் ஆக தகுதியற்றவையா? என்ற கேள்விகளை எழுப்பினோம். அறநிலையத் துறை வரலாற்றிலேயே பொதுவெளியில் மக்களைத் திரட்டி ஆன்மீகப் பரப்புரைகளோடு 'சிவராத்திரி' கொண்டாடப்படுவது இதுவே முதல் முறை என்று அமைச்சர் சேகர் பாபு பெருமையுடன் அறிவித்தார். வரலாற்றில் இல்லாத அறநிலையத் துறை செய்யாத ஒன்றை ஏன் இப்போது செய்ய வேண்டும் என்று கேள்வி எழுப்பினோம்.

முதல்வர் மு.க. ஸ்டாலின் இப்போது தொடர்ந்து வலியுறுத்தி வரும் 'திராவிடன் மாடல்' ஆட்சி மக்களைத் தேடிச் சென்று கல்வி, சுகாதாரம், நிவாரணத் திட்டங்களை வழங்கி வருகிறது. மக்களைத் தேடிச் சென்று, மதத்தைப் பரப்புவது 'திராவிடன் மாடல்' அல்ல; அது 'சனாதன மாடல்' என்பதையும் எடுத்துக் காட்டினோம். தி.மு.க. பெரியார் இயக்கமாக செயல்பட வேண்டும் என்றுகூட வலியுறுத்த வில்லை. அது அ.இ.அ.தி.மு.க.வாக மாறாமல் இருக்க வேண்டும் என்ற கருத்தையும் முகநூலில் மிகச் சரியாக சிலர் சுட்டிக்காட்டினார்கள்.

இவ்வளவுக்குப் பிறகு அறநிலையத் துறை ஆணையர் குமரகுருபரன் மகா சிவராத்திரி கொண்டாட்டத்தை எப்படி நடத்த வேண்டும் என்று அறநிலையத் துறை அதிகாரிகளுக்கு ஒரு சுற்றறிக்கையை அனுப்பினார். அந்த சுற்றறிக்கையில் மகாசிவராத்திரி கொண்டாடும் கோயில்களில் மட்டும் நம்பிக்கையோடு வரும் பக்தர்களுக்கு உரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று ஆணையர் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தினார். கோயிலுக்கு வெளியே மக்களைத் திரட்டி, மக்கள் விழாக்களாக நடத்தும் அமைச்சரின் அறிவிப்பை அறநிலையத் துறை ஏற்கவில்லை என்பதை சுற்றறிக்கை உள்ளடக்கம் தெளிவுபடுத்தியது.

1. சிவ வழிபாட்டுக்குக் கோயிலுக்கு வரும் பக்தர்கள் மனம் மகிழும்படி கலை, ஆன்மீக நிகழ்ச்சிகளை நடத்த கோயில் நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.
2. பக்தர்கள் சிரமமின்றி 'தரிசனம்' செய்வதற்கு உரிய வசதிகள், மருத்துவ உதவிகள், கழிவறை வசதிகளை செய்து தர வேண்டும்.
3. பக்தி சொற்பொழிவு, தமிழ் பக்தி இசை நாட்டிய நாடகம், கிராமிய பக்தி இசை உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளை அந்தந்த திருக்கோயில்களில் நிதி வசதிக்கேற்பவும், உபயதாரர்களைக் கொண்டும் நடத்த வேண்டும்.
4. கலை நிகழ்ச்சிகளுக்கு கலைஞர்களை தேர்வு செய்யும்போது தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி மற்றும் இசைப் பள்ளிகளில் பயின்ற கலைஞர்கள் மற்றும் பண்பாட்டுத் துறை மூலம் தேர்ந் தெடுக்கப்பட்ட அந்தந்த பகுதியில் உள்ள கலைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

– என்று ஆணையர் சுற்றறிக்கை அறிவுறுத்தியுள்ளது. இவை எல்லாம் இது காலம் வரை அறநிலையத் துறை 'மகாசிவராத்திரி'யில் அதன் அதிகாரத்துக்கு உட்பட்டு செய்து வந்த ஏற்பாடுகள்தான், அறநிலையத் துறை வரலாற்றில் இதுவரை இல்லாத மக்களைத் திரட்டி பக்தி ஆன்மீகத்தை அமைச்சரின் கூற்றுப்படி பரப்புபவை அல்ல.

அறநிலையத் துறை அமைச்சர் மகாசிவராத்திரி கொண்டாட்டங்கள் எப்படி நடக்கும் என்று ஏற்கனவே பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்துவிட்ட பிறகு, அதே பிரச்சினை குறித்து அறநிலையத் துறை ஆணையர் அதிகாரப்பூர்வமாக ஒரு சுற்றறிக்கை அனுப்ப வேண்டிய அவசியம் உருவாகியிருக்கிறது என்பதிலிருந்தே அமைச்சரின் மதப் பரப்புரை கருத்துகள் அறநிலையத் துறைக்கு ஏற்புடையதல்ல என்ற முடிவுக்கு அரசு வந்திருப்பதாகவே நாம் புரிந்து கொண்டோம். ஆனால் அப்படி ஏதும் நடக்கவில்லை. மயிலாப்பூரில், அதிகாரிகள், அமைச்சர்கள் திட்டமிட்டபடி கோயிலுக்கு சொந்தமான பொது இடத்தில் விடிய விடிய விழா கொண்டாட்டம் அதிகாரிகள், அமைச்சர் பங்கேற்புடன் நடந்து முடிந்திருக்கிறது. இது மக்கள் மீதுள்ள கவலையால் நாம் வெளிப்படுத்துகிற கருத்தே தவிர, திணிப்பு அல்ல.

பா.ஜ.க.வும் இந்து அமைப்புகளும் மகாசிவராத்திரியைப் பயன்படுத்தி மதப் பிரச்சாரங்களை இரவு முழுதும் பல்வேறு வடிவங்களில் நடத்துகிறார்கள். அது அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமை என்ற நிலையில் அரசு தடுத்துவிட முடியாது. கோயில் சடங்கு, கோயில் நிர்வாகம் மற்றும் கண்காணிப்புகளுக்கான அற நிலையத் துறை அதற்கான எல்லைகளை மீறக் கூடாது என்பதே நமது எதிர்ப்பின் நோக்கம். ஒரு கருத்து சிலரால் முன் வைக்கப்படுகிறது.

மக்களிடம் உள்ள நம்பிக்கைகளை ஆட்சிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்காக அடையாளங்களைக்கூட விட்டு தரலாம் என்கிறார்கள் இந்த அணுகுமுறை ஆபத்தானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பெரியார் கடவுள் மதங்களை கட்டுடைத்து அந்த நம்பிக்கைகளின் 'கண்முடித்தனமான உறுதி'களைத் தளர்த்தி – இறுக்கத்தை – நெகிழ்ச்சியாக்கினார். முழுமையாகக் கடவுள் மத நம்பிக்கைகளை பெரியார் இயக்கம் ஒழித்து விட்டதா என்ற கேள்வி அபத்தமானது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படும் நம்பிக்கைகளை முற்றிலுமாக அழித்தொழிக்க முடியாது. அதன் இறுக்கத்தைப் பெரியார் தளர்த்தியதால்தான் மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை கடவுள்களிடமும் மதநம்பிக்கை சடங்குகளிலும் எதிர்பார்க்காமல் ஆட்சியாளர்கள் மட்டுமே தீர்க்க முடியும் என்ற தீர்க்கமான முடிவுக்கு வந்துள்ளனர். இப்போது மக்கள் உரிமைகளுக்கான போராட்டங்கள் வீதிகளில் நடக்கிறதே தவிர, கோயில்களுக்குள் கடவுள் முன் 'பிரார்த்தனை'களாக நடப்பது இல்லை; மக்களிடம் மெல்ல மெல்ல உருவாகி வரும் சிந்தனை மாற்றங்களை முடக்கி மீண்டும் அரசுகளே மதத்தின் பாதைக்கு மக்களை இழுத்துச் செல்வது மக்களை வஞ்சிக்கும் மலிவு அரசியலே ஆகும். தமிழ்நாட்டில் மத உணர்வுகள் மேலும் மேலும் தூண்டி விடப்படுமேயானால் அதற்காகவே காத்திருக்கும் மதவாத அரசியல் சக்திகளின் வளர்ச்சிக்கே அது பாதையமைத்து மக்களை தயார் செய்வதற்கு துணை நின்று மதவாத அரசியல் நுழைவை எளிமையாக்கி விடும் என்பதே நமது கருத்து. பெரும் பான்மையாக இருக்கும் மக்கள் 'இந்து' அடையாளத்துக்குள் இருந்தாலும் நம்பிக்கைகளைக் கொண்டிருந்தாலும் சமூக நீதியையும் வாழ்வுரிமையையும் சுயமரியாதையையும் தாங்கள் நம்பும் மதத்துக்கும், கடவுள் நம்பிக்கைக்கும் பலி கொடுக்கத் தயாராக இல்லை.

கடவுள் மதப் பிடிகளின் வலிமையான இறுக்கத்தை தமிழகத்தில் தளரச் செய்து அதன் இணைப்புச் சங்கிலிகளின் தொடர் துண்டிக்கப்பட்டதே தமிழகம் முன்னேற்றப் பாதையில் பயணிப்பதற்கு அடிக்கல் அமைத்துத் தந்திருக்கிறது. வடமாநிலங்களில் இப்போதும் மதத்துக் குள்ளேயே கடவுள் நம்பிக்கைக்குள்ளேயே தங்கள் தொலைந்து போன வாழ்க்கையைத்தேடிக் கொண்டிருக்கும் மக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த உண்மை புரியும்.

எனவே எதிர்காலத்தில் இந்து அறநிலையத்துறை செயல்பாடுகள் அதன் எல்லைகளுக்குள்ளே நிற்க வேண்டும் என்ற எச்சரிக்கையோடு செயல்படுவதற்கு இந்த எதிர்ப்புகள் நிச்சயம் வழிகாட்டியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

## 'மூவாயிரம் ஆண்டுகளாக எந்தத் திணிப்புகளும் தமிழ்நாட்டில் வெற்றி பெற்றதில்லை'



நான் என்னுடைய நாடாளுமன்ற உரையில் பேசுகின்ற பொழுது, இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் என்று குறிப்பிட்டேன். நான் மாநிலங்கள் என்று சொல்கிறேன் என்றால், அந்தச் சொல் எங்கிருந்து வந்தது ? ஒரு மாநிலம் என்றால் என்ன ?

மண்ணைப் பற்றியது மட்டுமல்ல; மக்களிடமிருந்து அந்த மண்ணினுடைய தன்மையை அறிவது - மக்களிடமிருந்து அவர்களுடைய குரல் வெளிவருவது - அவர்களுடைய குரலிலிருந்து அவர்களுடைய மொழி வெளிவருகின்றது- மொழியிலிருந்து கலாச்சாரம் வருகின்றது - கலாச்சாரத்திலுருந்து சரித்திரம் வருகின்றது - பின்னர் வரலாற்றிலிருந்து மாநிலம் உருவாகுகிறது.

இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் என்று சொல்கின்றபொழுது, மாநிலங்களிலிருந்துதான் இந்தியா என்பதே வருகின்றது என்பதை நான் அழுத்தமாகச் சொன்னேன்.

எழுத்துக்கள் சேர்ந்து சொல்லாக மாறுகின்றது; வார்த்தைகள் சேர்ந்து வாக்கியமாக மாறுகிறது; வாக்கியங்கள் ஒன்று சேர்ந்து கவிதையாக மாறுகின்றன.

எழுத்துக்களை மதிக்கவில்லை என்றால், சொற்களை மதிக்கவில்லை என்றால், வாக்கியத்தை மதிக்கவில்லையென்றால் வேறு எதையும் மதிக்க முடியாது.

●

பிரதமர் இங்கு வருகிறபொழுதெல்லாம் பொருள் புரியாமல், தமிழ்நாட்டைப்பற்றி பேசுகிறார். அது 3000 ஆண்டுகள் பழமையுள்ள ஒரு பாரம்பரியமான நாடு.

அவர் சொற்களைப் புரிந்து கொள்வதில்லை - வாக்கியங்களைப் புரிந்து கொள்வதில்லை - மொழியைப் புரிந்து கொள்வதில்லை - பிறகு எந்த அடிப்படையில் அவர் தமிழ்நாட்டைப் பற்றி பேசுகிறார்?

தமிழ்நாட்டு மக்கள் ஒட்டுமொத்தமாக நீட், ஜி.எஸ்.டி என்பது நியாயமற்றது அது எங்களுக்கு பாதகத்தை ஏற்படுத்துவது என்று கூறுவதைப் புரிந்து கொள்ளாமல், நீங்கள் அவர்களை அவமதிக்கிறீர்கள்.

நான் நாடாளுமன்றத்தில் பேசுகிறபொழுது சொன்னேன் ; அவர்கள் தமிழ்நாட்டினுடைய வரலாற்றைப்பற்றியும் தெரிந்து கொள்வதில்லை; இந்த நாட்டினுடைய வரலாற்றையும் புரிந்து கொள்ளவில்லை.

பிறகு 3000 ஆண்டுகளில் இன்றுவரை தமிழ்நாட்டின்மீது யாராலும், எதையும் திணிக்க முடிந்ததில்லை.

●

நீங்கள் யார் இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்று தீர்மானிப்பதற்கு ? இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்ற அதிகாரத்தை உங்களுக்கு யார் கொடுத்தது ?

ஏன் இந்திய நாட்டு மக்கள் - இந்தியா எப்படி இருக்க வேண்டும் என தீர்மானிக்கக் கூடாது ? உங்களுக்கு யார் அந்த அதிகாரத்தைக் கொடுத்தது ?


இதுதான் இன்றைக்கு இருக்கின்ற முக்கியமான - மய்யப் பிரச்சனையாகும் இந்த நாட்டைப் பொறுத்தவரையில்.

நம்முடைய அமைப்பு, மக்களுடைய குரல்தான் எதிரொலிக்க வேண்டும். ஆனால், திட்டமிட்டுத் தொடர்ச்சியாக மக்களுடைய உரிமைகளும், உணர்வுகளும் நசுக்கப்படுகின்றன. நீதித்துறை, தேர்தல் ஆணையம், பத்திரிக்கைத் துறை ஆகியவை எல்லாம் தொடர்ச்சியாகத் திட்டமிட்டு நசுக்கப்படுகின்றன.

பாரதீய ஜனதா, எந்தக் கற்பனையான உலகத்திலும் வாழ வேண்டாம் ; அவர்களை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்று எங்களுக்குத் தெரியும். ஏனென்றால், அவர்கள் வரலாற்றை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள் - அவர்களால் வெற்றி பெற முடியாது - தோற்றுக் கொண்டே தான் இருப்பார்கள்.

**(முதல்வர் மு.க.ஸ்டாலின் சுயசரிதை வெளியீட்டு விழாவில் இராகுல் காந்தி பேசியது – பிப்.28, 2022)**

### பொது நன்மைக்குப் பாடுபடுபவர்கள் யார்?



நான் மிகப் பெருமையோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகின்றேன். பொதுவாழ்வில் எந்தவிதமான இலாபத்தையும் கருதாமல், எந்தப் பெருமையும், சட்டசபை, ஜில்லாபோர்டு என்பதாக எதையும் கருதாமல் கை நட்டப்பட்டுக் கொண்டு, தங்களுக்கு உள்ளதையும் விட்டுவிட்டு, உள்ளபடி, பொதுநன்மை என்கிறதையே இலட்சியமாக கொண்ட யாராவது பாடுபடுகிறார்கள் என்றால் அது திராவிடர் கழகத்தார் என்கிற இந்த ஒரு கழகத்தாரைத் தவிர வேறு யாருமேயில்லை. மற்றவர்களெல்லாம் பாடுபடுகிறார்களென்றால் அந்தப் பாட்டை எலெக்ஷனுக்கும் மற்ற வாழ்வுக்கும் கொண்டுபோய் விற்று விடுகிறார்கள்; பலர் அதனாலேயே வயிறு வளர்க்கிறார்கள். மற்றும் எடுத்துப்பாருங்கள், ஒவ்வொருவரும் பொதுவாழ்வுக்கு வந்த போது அவர்களுக்கிருந்த யோக்கியதை, அந்தஸ்து, செல்வம் முதலியவைகளை அவர்கள் இன்றைக்கு இந்த பொதுவாழ்வின் பெயரால் எல்லாத் துறைகளிலும் எத்தகைய பெருமையான வாழ்வு நடத்துகிறார்கள் என்பவைகளை !

– பெரியார் – புரட்சிக்கு அழைப்பு 1954

# பெரியாரை விமர்சிக்கும் தமிழ்த் தேசியர்கள் வாதங்களுக்கு ஆணித்தரமாக மறுக்கும் நூல் (3)

*ப. திருமாவேலன், 'இவர்தமிழர் இல்லை என்றால் எவர் தமிழர்?' - தொகுப்பு நூல் குறித்த ஒரு பார்வை.*

**விடுதலை இராசேந்திரன்**


ப. திருமாவேலனின், "இவர் தமிழர் இல்லை என்றால் எவர் தமிழர்?" நூலின் இரண்டாம் தொகுதி மொழி, மொழி வழி மாகாணப் பிரிவினையின் வரலாறுகளை விளக்குகிறது. ம.பொ.சி. முன்மொழிந்தது - இந்துத்துவத் தமிழ்த் தேசியம், குணா முன் மொழிந்தது - இறையியல் தமிழ்த் தேசியம், பெ. மணியரசன் முன் மொழிந்தது - நிலப்பிரபுத்துவ தமிழ்த் தேசியம் என்று சான்றுகளுடன் நிறுவுகிறது. பிரிட்டிஷ் ஆட்சியில் திருவிதாங்கூர், கொச்சி என்ற இரண்டு பகுதிகளும் மன்னர்கள் ஆட்சியின் கீழ் சமஸ்தானங்களாக இருந்தன. மொழி வழி மாகாணப் பிரிவினையின் போது, திருவிதாங்கூர் இணைப்புப் போராட்டத்துக்கு ஆதரவாக பெரியார் எழுதிய ஏராளமான அறிக்கைகளை தேதி வாரியாகப் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

மொழிவழி மாநிலப் பிரிவினைகளைப் பெரியார் 'எல்லைகள் மீட்பு' என்ற ஒற்றைக் கண்ணோட்டத்துடன் அணுகிடவில்லை. இந்தியாவிலிருந்து தனித் தமிழ்நாடு பிரிய வேண்டும் என்ற இலட்சியத்தோடும் பெரியார் இணைத்துப் பார்த்தார். ஒன்றுபட்ட இந்தியாவுக்குள் அனைவரையும் உள்ளடக்கி இன வழிச் சுரண்டலுக்கு வலிமை சேர்ப்பதாக போராட்டத்தின் இலக்கு இருந்துவிடக் கூடாது என்பதில் பெரியார் உறுதியாக இருந்தார்.

எல்லை மீட்புப் போராட்டங்களில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான பங்களிப்பை பெரியார் வழங்கவில்லை என்று தோழர் மணியரசன் போன்றோர் பரப்பி வரும் கருத்துகளுக்கு அழுத்தமான மறுப்புகள் முன் வைக்கப்பட்டுள்ளன. திருவிதாங்கூர் போராட்டத்துக்குத் தலைமையேற்று வழி நடத்திய மார்ஷல் நேசமணி, பெரியாரிடம் மிகுந்த பற்றுக் கொண்டிருந்ததையும் அவரது கரங்களினால் மாலை அணிவிக்கப்பட்ட ஒரே தலைவர் பெரியார் தான் என்றும் நேசமணி வரலாற்று நூலிலிருந்து (நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்) நூலாசிரியர் எடுத்துக் காட்டியிருக்கிறார். தனித் தமிழ்நாடு இலட்சியத்தோடு மக்கள் பகுத்தறிவுப் பாதைக்குத் திரும்ப வேண்டும் என்ற கருத்தை பெரியார் தொடர்ந்து வலியுறுத்தியே வந்திருக்கிறார். அதேபோன்று தேவிகுளம், பீர்மேடு எல்லை மீட்புப் போராட்டத்தில் பெரியார் குறித்து தவறாகப் பரப்பப்படும் பரப்புரைக்கு பெரியார் எழுத்து பேச்சுகளிலிருந்தே ஏராளமான ஆதாரங்களைப் பட்டியலிட்டுள்ளார் நூலாசிரியர். எல்லை மீட்புப் போராட்டக் காலங்களில் நடந்த விவாதங்கள், சட்டமன்ற நடவடிக்கைகள் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. தேவிகுளம், பீர்மேடு எல்லை மீட்புக்கு ம.பொ.சி. கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்க பெரியார், தனித் தமிழ்நாடு, இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட கோரிக்கையும் இணைக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தார். உண்மையான தமிழ்த் தேசிய விடுதலையைப் பேசுகிறவர்கள் பெரியாரின் இந்த நிலையை ஆதரிக்க வேண்டும். மாறாக, பெரியாருக்கு எதிராக அவதூறுப் பரப்புவதற்கே பயன்படுத்துகிறார்கள்.

ஆந்திர மாநிலம், மொழி வழியாக முதலில் பிரிந்த பிறகு கேரளம் மற்றும் கருநாடகத்தின் சில பகுதிகளை தமிழ்நாட்டோடு இணைத்து, தட்சிணப் பிரதேசம் என்ற அமைப்பை உருவாக்கும் முயற்சிகள் நடந்தபோது, பெரியார் அதைக் கடுமையாக எதிர்த்தார். பெரியார் பேசிய 'திராவிடம்' என்பது மலையாளிகள், தெலுங்கர்கள், கன்னடர்களுக்கு ஆதரவானது; பெரியார் பிறப்பால் ஒரு கன்னடர்; எனவே தமிழர்களுக்கு துரோகம் செய்தார் என்ற நேர்மையற்ற ஆதாரங்கள் இல்லாத மொக்கை வாதங்களுக்கு விரியான பதிலடியைத் தந்திருக்கிறார் நூலாசிரியர்.

'மூவரைப் புரிதல்' என்ற அத்தியாயம் ம.பொ.சி. 'தமிழ்த் தேசியத்தை' தோலுரிக்கிறது. காங்கிரசில் இருந்து கொண்டே 'தமிழரசுக் கழகம்' தொடங்கினார் (1946 நவம்பர் 21). பிரிவினைக் கூடாது; இந்தியாவுக்குள் இருந்து கொண்டே 'சுயநிர்ணய உரிமை' பெற வேண்டும் என்பதே அவரது குறிக்கோள். ஆனால் ம.பொ.சி. சுயநிர்ணய உரிமை என்ற பெயரில் முன்மொழிந்த 'தமிழ்த் தேசியம்', 'இந்து' தேசியமாகவே இருந்தது. பெரியார்-ம.பொ.சி. முதல் சந்திப்பு சென்னையிலிருந்து விருதுநகர் செல்லும் விரைவு வண்டியில் நிகழ்ந்தது (1947 ஜன. 26). ம.பொ.சி., தன்னுடன் பயணிக்கிறார் என்பதை அறிந்த பெரியார், அவர் இருக்கைக்கு தேடிச் சென்று பார்த்து காங்கிரசில்




- **ம.பொ.சி.யின் ஆர்.எஸ்.எஸ். குரல்.**
- **பெரியார் பேசிய பெண்ணுரிமை உதிரி வாதமா?**
- **ஈழத் தமிழர் விடுதலைக்கும் திராவிட இயக்கத்துக்கும் இடையே வரலாற்றுப்பூர்வ உறவுகள் என்ன?**

இருந்து கொண்டே சுயநிர்ணய உரிமை பேசுவதற்கு ஆதரவு தெரிவித்து, காங்கிரசும் பாாப்பனர்களும் தங்களுக்கு தொல்லை தருவார்கள்; எங்கள் ஆதரவு உங்களுக்கு எப்போதும் இருக்கும் என்று நட்புக்கரம் நீட்டுகிறார்; ம.பொ.சி. அதை ஏற்கவில்லை. 'ஆரியர், திராவிடர்' பார்வையை ஏற்க முடியாது. மொழி வழிப் பார்வையே எனது குறிக்கோள் என்று ம.பொ.சி கூறியபோது, "நமக்குள் வேறுபாடு இல்லை அய்யா; அப்படியே இருந்தாலும் காலப்போக்கில் சரியாய் விடும்; நாம் ஒன்று சேரத்தான் போகிறோம்" என்று பெரியார் கூறினார். "என்னை விட வயதில் பெரியவரான அவர் தாமாகவே வலிய வந்தது என்னை உபசரித்தது வியப்பைத் தந்தது" என்று எழுதியுள்ளார் ம.பொ.சி. மேற்குறிப்பிட்ட அனைத்தும் ம.பொ.சி.யின் பதிவுகள் ('எனது போராட்டம்' நூல்).

இந்திய தேசிய எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்புக்கான ஒரு குரல் எந்தத் தலைவரிடமிருந்து ஒரு சிறு அளவு வெளிப்பட்டாலும் அவர்களோடு பல்வேறு கருத்து முரண்பாடுகள் தனக்கு இருந்தாலும் அவற்றை ஒதுக்கிவிட்டு வலியச் சென்று அவர்களை அரவணைக்கும் மிக உயர்ந்த மாண்பாளராக பெரியார் இருந்தார். சமூக இயங்கியல் பார்வையில் கூற வேண்டுமானால் எதிரிகளைத் தனிப்படுத்தி இலட்சியத்தின் முதன்மையான இலக்கை முன்னெடுத்துப் போராட்டத்தைக் கூர்மைப்படுத்துவதற்கான அணுகுமுறை அவரிடமிருந்ததை உணர முடியும்.

ம.பொ.சி., ஆங்கில எதிர்ப்பு என்ற பெயரில் இந்தியை ஆதரித்தார். பெரியார், இரயில் நிலையங்களில் இந்தி அழிப்புப் போராட்டம் நடத்தியபோது பூசப்பட்ட கருப்பு மை மீது மண்ணெண்ணெய்ப் பூசி, இந்தி ஆதரவுப் போராட்டம் நடத்தினார். பண்பாட்டு மொழி சமஸ்கிருதம் என்றார். தமிழர் மதம் இந்து என்றார். திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளை 1951 மார்ச் 24,25 தேதிகளில் சென்னையில் தொடங்கி, 9 மாதம் பல இடங்களில் நடத்தி, ஈரோட்டில் (18.11.1951) நிறைவு செய்தார். இதுவே இறுதி மாநாடு என்றார். அதிலும் அவரிடம் நேர்மையில்லை. "நான் இந்த எதிர்ப்பு மாநாடுகளை நடத்தியது தரும சங்கடமான நிலையில் தான். மனதார விரும்பி அதை நான் நடத்தவில்லை; அதற்காக வருந்தவும் இல்லை" என்று பிற்காலத்தில் (1974) எழுதினார். ராஜாஜி கொண்டு வந்த குலக் கல்வித் திட்டத்தை ஆதரித்தார். ராஜாஜி தனக்கான 'அபிமன்யூ'வாக ம.பொ.சி. செயல்படுகிறார். தனக்காக வியூகம் வைத்து தான் தடைகளைத் தகர்த்து உள்ளே நுழைய வழி வகுத்துத் தருகிறார் என்று வெளிப்படையாகவே எழுதினார்.

திராவிட இயக்கத்தை எதிர்த்த ம.பொ.சி., அதே திராவிட இயக்க ஆதரவோடு சட்டமன்ற உறுப்பினரானார். மேலவை உறுப்பினரானார். தி.மு.க.விடமிருந்து இப்பதவிகளைப் பெற்றவர். எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது மேலவைத் தலைவர் பதவியைப் பெற்றார். பல்கலைக் கழகங்களில் பதவிகளைப் பெற்றார். இப்படி பதவிச் சுகங்களைப் பெற்று அனுபவித்தவர். 1989இல் மீண்டும் காங்கிரசில் அய்க்கியமானார். ஈழத்தில் தமிழர்களைக் கொன்று குவிக்க ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது இந்திய இராணுவத்தை அனுப்பியபோது அதை ஆதரித்து ஊர் ஊராகப் பிரச்சாரம் செய்தார். அவர் சுயநிர்ணய உரிமை பேசியது உதட்டளவில் தான். அவரது உள்ளத்தில் பதிந்து நின்றது ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தம் தான்.

"பாரதம் (இந்தியா அல்ல - கவனிக்க) ஒரு நூற்றாண்டு காலம் போராடியது என்றால் அதற்கு முக்கிய காரணம் பாரத மன்னர்களின் அரசியல் உணாச்சியைவிட மக்களின் மத உணர்ச்சியேயாகும். அன்னிய நாட்டினருக்கு அடிமைப்படுகிறோம் என்பதிலிருந்த வெட்கத்தைவிட, அன்னிய மதத்தினருக்கு அடிமைப்படுகிறோம் என்ற வேதனையே ஒரு நூற்றாண்டுக்காலம் போராடுவதற்கான ஆற்றலை பாரத மக்களுக்கு தந்தது... இஸ்லாமிய கிறிஸ்தவ சமுதாயங்கள் ஒன்றன் பின் ஒன்றாக இராணுவ ரீதியில் பாரத கலாச்சாரத்தின் மீது படை எடுத்துப் போரிட்டனர் என்று பச்சையாக ஆர்.எஸ்.எஸ். குரலையே ஒலித்தவர்தான் ம.பொ.சி. இது குறித்த ஏராளமான ஆதாரங்கள் வரலாற்றுத் தகவல்களைப் பதிவு செய்கிறது இந்த அத்தியாயம். (ம.பொ.சி. எழுதிய "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" நூல் - 1962இல் எழுதியது)

பெரியாருக்கு எதிராக தொடைத் தட்டிக் கிளம்பிய பெங்களூரைச் சார்ந்த குணாவின் வாதங்கள் அவர் எழுத்துக்களைக் கொண்டே மறுக்கப்பட்டிருக்கின்றன. 'திராவிடத்தால் வீழ்ந்தோம்' என்ற அவரது நூலுக்கான மறுப்பை அவரே எழுதிய 'இந்திய தேசியமும் திராவிட தேசியமும்' என்ற நூலில் எழுதியிருப்பதை ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அவரது 'தமிழரின் தொன்மை' என்ற நூல், இறந்து போன காஞ்சி சீனியர் சங்கராச்சாரிக்கு ஆதரவாகவும் பாவாணரை மறுத்தும் எழுதப்பட்டிருப்பதை அம்பலப்படுத்தியிருக்கிறார் நூலாசிரியர். நீதிக் கட்சித் தலைவரான சர். பிட்டி தியாகராயர் மீது குணா பரப்பும் அவதூறு; 'சூத்திரர்' என்பது தேவதாசிகளுக்கு மட்டுமே உரியது. எல்லோருக்குமானது அல்ல" என்ற திரிபு, எல்லோரையும் சூத்திரராக்கியது பெரியார் தான் என்ற உளறல். அத்தனைக்கும் வரலாற்றாசிரியர்களின் கருத்துகளைக் காட்டி மறுக்கப்பட்டுள்ளது.

தோழர் மணியரசனின் அரசியல் வரலாற்றையும் விவரித்துள்ளது. அவர் பெரியார் மீது வைத்து வரும் விமர்சனங்களுக்கு வலிமையான மறுப்புகள் முன் வைக்கப்பட்டுள்ளன. தோழர் மணியரசனின் முரண்பாடுகளையும் அம்பலப்படுத்தியிருக்கிறது. மறுப்புரை வழியாக பெரியார் குறித்து இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டிய ஏராளமான வரலாற்றுத் தகவல்களும் பெண்ணுரிமை குறித்து அவரது பார்வையும் விரிவாக அலசப்பட்டுள்ளது. பெரியாரின் பெண்ணியக் கருத்துகளை 'உதிரிவாதம்', 'நுகர்வு வாதம்' என்கிறார் பெ. மணியரசன். பெரியார் பேசிய பெண்ணுரிமை பெண் விடுதலை; பெண்களை ஆணின் இடத்தில் வைக்கவில்லை; ஆண்களுக்கும் மேலான இடத்தில் வைத்தார் என்ற சரியான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. ஆனால் பிள்ளைகளே வேண்டாம் என்பதல்ல அவரது கொள்கை; அதிகம் வேண்டாம் என்றார் என்று நூலாசிரியர் கூறுவதில் நமக்கு கருத்து மாறுபாடு உண்டு. 'அதிகம் பெற்றுக் கொள்ள வேண்டாம்' என்று பெரியார் பேசி வந்தாலும் பிள்ளைகள் பெறுவதையே நிறுத்தினால்தான் பெண் விடுதலை முழுமையடையும் என்பதே அவரது கொள்கை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். "பெண் ஏன் அடிமையானாள்?" நூலில் இதைத் தெளிவாகவே பெரியார் விளக்கியிருக்கிறார். பெரியாரின் 'திராவிடம்' என்ற அத்தியாயம் தமிழறிஞர்கள் மேற்கோள்களோடு பவுத்த சமணச் சான்றுகளோடு "தமிழ் மொழியையும் தமிழ் இனத்தையும் தமிழ்நாட்டையும் குறிக்கும் சொல்லாகவே பலராலும் பல நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டது" என்று நிறுவிக் காட்டியிருக்கிறது. "பெரியார் தமிழுக்கே எதிரி" என்று சில தமிழ்த் தேசிய குழுக்களும் பா.ஜ.க. சங்கிகளும் முன் வைக்கும் குற்றச்சாட்டுகளை மறுத்து தமிழ் மொழி வளர்ச்சிக்காக அதன் மீது சுமத்தப்பட்ட இழிவை எதிர்த்து பெரியார் எழுத்துகளை எடுத்துக் காட்டி மறுத்துள்ளார் நூலாசிரியர்.

'தமிழ் ஈழமும் தந்தை பெரியாரும்' என்ற அத்தியாயம் இதுவரை வெளிச்சத்துக்கு வராத பல தகவல்களைப் பதிவு செய்துள்ளது. 1950களிலிருந்து ஈழத் தமிழர்களுக்காக பெரியார் 'விடுதலை' ஏட்டின் வழியாகக் குரல் கொடுத்து வந்துள்ளார். 1928 முதல்

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# உ.பி. தேர்தலில் பாஜகவை மிரட்டும் ‘கோமாதா’க்கள்

“உத்தர பிரதேச சட்டப்பேரவைக்கான 7 கட்ட தேர்தலில் 4 கட்டவாக்குப் பதிவு நிறைவடைந்துள்ளன. எஞ்சியுள்ள 3 கட்ட தேர்தல் நடைபெறும் மாவட்டங்களில் பசுக்கள் விவகாரம் கிளம்பியுள்ளது.

பசுவை இந்துக்கள் புனிதமாகக் கருதுகின்றனர். இதனால் பசுப் பாதுகாப்பை பாஜக தொடர்ந்து வலியுறுத்துகிறது. மத்தியில் பாஜக ஆட்சி 2014 இல் அமைந்தது முதல் வட மாநிலங்களில் பசுப் பாதுகாப்பு எனும் பெயரில் கொலைகளும் நிகழ்ந்தன. அதேசமயம், கைவிடப்படும் பசுக்களும் பிற மாடுகளும் தங்கள் பயிர்களை மேய்ந்து இழப்பை ஏற்படுத்துவதாக விவசாயிகள் இடையே புகார்களும் கிளம்பின.

உ.பி.யில் ஆளும் பாஜக அரசு, இப்பிரச்சினைகளில் நடவடிக்கை எடுக்க தயக்கம் காட்டியது. இதனால் விவசாயிகள் அந்த மாடுகளைப் பிடித்து பள்ளி, மருத்துவமனை மற்றும் அரசு அலுவலகங்களில் அடைத்தனர். மாடுகள் முட்டி உயிர்கள் பலியாகும் செய்திகளும் ஆங்காங்கே வெளியாகின. இதனால் முதல்வர் ஆதித்யநாத் அரசு மீது விமர்சனங்கள் கிளம்பின.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடந்த 4-ஆம் கட்ட வாக்குப் பதிவை, பாந்தா மாவட்டத்தின் தஸத் பூர்வா கிராம மக்கள், பசுக்கள் பிரச்சினையை முன்வைத்து புறக்கணித்தனர். எஞ்சிய 3 கட்ட தேர்தல்நடைபெறும் உ.பி.யின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதியில் கைவிடப்பட்ட பசுக்கள் அதிகம் உள்ளன. இவற்றால் ஏற்படும் பிரச்சினையை எதிர்க்கட்சித் தலைவர்கள் அரசியல் ஆயுதமாக்கி பாஜகவை விமர்சித்து வருகின்றனர்.

இவர்களை சமாளிக்க பிரதமர் மோடி நேற்று முன்தினம் தனது பிரச்சாரத்தில் பேசும்போது, “தேர்தல் முடிவுகளுக்குப் பின் உ.பி.யில் பசுக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும். பசுக்களின் சாணத்தை விவசாயிகளுக்குப் பலன் தரும் வகையில் எங்கள் அரசு மாற்றும்” என்றார்.

அமேதியில் முதல்வர் ஆதித்யநாத் கூறும்போது, “விவசாயிகளின் பயிர்களைப் பசுக்கள் சேதப்படுத்துவதை தடுக்க, மார்ச் 10-இல் புதிய ஆட்சி அமைந்த பிறகு மிகப்பெரிய அளவில் பசுப் பாதுகாப்பகங்கள் அமைக்கப்படும். இவற்றில் கைவிடப்பட்ட பசுக்களை பராமரிக்க விவசாயிகளுக்கு ரூ.900 முதல் ரூ.1,000 வரை அளிக்கப்படும்” என்று அறிவித்தார்.

கடந்த 2017-இல் உ.பி.யில் பாஜக ஆட்சி அமைந்தவுடன் முதல்வர் ஆதித்யநாத்தால் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதில், சட்டவிரோத இறைச்சிக் கூடங்கள் மூடப்பட்டன. இதையடுத்து பசுக்களின் எண்ணிக்கை 17 சதவீதம் அதிகரித்தது. உ.பி.யில் கைவிடப்பட்ட பசுக்கள் தற்போது சுமார் 16 லட்சம் உள்ளதாக ஒரு புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. உ.பி.யின் 5,617 பசுப் பாதுகாப்பு மய்யங்களில் 8 லட்சம் பசுக்கள் இருப்பதாகத் தெரிகிறது.”

பசுக்களைப் பொதுமக்கள் தத்தெடுக்கும் திட்டத்தையும் முதல்வர் ஆதித்யநாத், அறிமுகப்படுத்தினார். இதன் எண்ணிக்கை சுமார் பத்தாயிரத்துடன் நின்று விட்டது. கடந்த 3 ஆண்டுகளில் பசுக்கள் பாதுகாப்புக்காக அரசு ரூ.355 கோடி நிதி ஒதுக்கியது குறிப்பிடத்தக்கது.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

1944 வரை நீதிக்கட்சிக்கும் மலையகத் தமிழர்களுக்கும் இருந்த தொடர்பு, 1931இல் இலங்கையில் சுயமரியாதை இயக்கம் தொடங்கப்பட்ட வரலாறு. 1956 முதல் தி.மு.க., ஈழத் தமிழர்கள் விடுதலைக்கு ஆதரவு தந்தது; யாழ்ப்பாணத்தில் 1969இல் நடந்த தி.மு.க.வின் நான்காவது மாநாடு ஈழத் தமிழர்கள் உரிமைக்காக அண்ணா எழுதிய கட்டுரைகள் என்ற ஏராளமான வரலாற்றுச் செய்திகள் நூலில் இடம் பெற்றுள்ளன.

1944இல் திராவிடர் கழகம் தமிழகத்தில் தொடங்கப்பட்டபோது இலங்கையிலும் ‘திராவிடர் கழகம்’ தொடங்கப்பட்டது. இளஞ்செழியன் தலைவரானார். தி.மு.க. தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டபோது, இலங்கையில் தி.மு.க. தொடங்கப்பட்டது. 1938 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்க நான்கு தமிழர்கள் தமிழ்நாடு வந்து, போராட்டத்தில் பங்கேற்று சிறைக்குச் சென்று விடுதலையான பிறகு இலங்கைக்கு திரும்பியிருக்கிறார்கள். 1939 முதல் பெரியார் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகத் தொடர்ந்து குரல் கொடுத்து வந்துள்ளார். தேதி வாரியாக பெரியார் வெளியிட்ட அறிக்கைகள் நூலில் பட்டியலிடப்பட்டுள்ளன. 1956லேயே தமிழர்கள் சிறு ஆயுதக் குழுவை உருவாக்கி சிங்களர்களுக்கு எதிராகப் போராடியுள்ளனர். 1970இல் ‘தமிழ் மாணவர் பேரவை’யை இளைஞர்கள் தொடங்கினார்கள். பிரபாகரனும் அதில் ஒருவர். தமிழ் ஈழ ஆயுதப் போராட்டத்தின் தொடக்கப் புள்ளிகளில் ஒருவரான சத்தியசீலன், கடல் வழியாக தமிழ்நாடு வந்து, 1971இல் தமிழ்நாட்டில் பெரியாரை சந்தித்துள்ளார். தமிழர் ஆயுதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தார் பெரியார். அதேபோல் கோவையில் தொழிலதிபர் விஞ்ஞானி ஜி.டி. நாயுடுவையும் சந்தித்தார். அவரும் ஆதரவு தெரிவித்தார். திராவிட இயக்கத்துக்கும் தமிழ் ஈழ விடுதலைக்கும் உள்ள வரலாற்றுத் தொடர்புகளை விரிவாக விளக்குகிறது இந்த அத்தியாயம். இது வரை வெளியே தெரியாத ஏராளமான செய்திகள் இடம் பெற்றுள்ளன.

நூலின் சுருக்கமாக சில செய்திகளை மட்டுமே இத்தொடரில் சுட்டிக் காட்டியுள்ளோம். தமிழ் - தமிழர் குறித்த பெரியாரின் கருத்துகள்; தமிழ்நாட்டு வரலாற்றில் தமிழர் உரிமைகளுக்கும் தமிழ் மொழிக்கும் நடந்த போராட்டங்கள், தமிழறிஞர்களிடம் பெரியாருக்கு இருந்த தொடர்புகள் குறித்து எந்தத் தரவு தேவைப்பட்டாலும் ஒரு கணினியின் பயன்பாட்டுக்கு நிகராக அத்தனை தகவல்களையும் உள்ளடக்கியிருக்கிறது, இந்தத் தொகுப்பு.

பெரியார் களஞ்சியத்தை (Periyar Encylopedia) கடும் உழைப்பால் உருவாக்கி தமிழினத்துக்கு ‘கொடை’யாக வழங்கியுள்ளார், ப. திருமாவேலன். இதுபோன்ற இளைஞர்கள் இருக்கும் வரை பெரியாரியலை திசை திருப்பி விட முடியாது என்ற அழுத்தமான நம்பிக்கை நமக்கு உருவாகிறது.

‘இவர் தமிழர் இல்லை என்றால் எவர் தமிழர்’ நூலைப் படித்து முடிக்கும்போது, ‘இவர்தமிழர் இல்லை என்றால் **எவன்டா** தமிழன்?’ என்று உச்சரிக்க வைத்து விடுகிறது இந்தத் தொகுப்பு. (நிறைவு)

# ‘நீட்’ எதிர்ப்பு மசோதாவைக் கிடப்பில் போடாதே; ஆளுநரைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றிய ‘நீட் விலக்கு’ மசோதாவை திருப்பி அனுப்பிய ஆளுநரை கண்டித்தும், பொதுப்பட்டியலில் உள்ள கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றக் கோரியும், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு எதிராக செயல்படும் ஆளுநரை திரும்ப பெறக்கோரியும், சென்னை ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டம், 28.02.2022 அன்று காலை 11:30 மணியளவில் பனகல் மாளிகை அருகில் நடைபெற்றது.

முற்றுகைப் போராட்டம் திராவிடர் தமிழர்கட்சி சார்பில் நடைபெற்றது. திராவிடர் தமிழர்கட்சித் தலைவர் வெண்மனி முற்றுகைப் போராட்டத்திற்கு தலைமை வகித்தார்.

நிகழ்வில், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் கலந்து கொண்டு கண்டனத்தை பதிவு செய்தார். விடுதலை இராசேந்திரன் “ஆளுநர் எவ்வளவு நாள் இந்த மசோதாவை கிடப்பில் போட்டு வைத்திருக்கிறாரோ அவ்வளவு நாள் வரை இந்தப் போராட்டம் தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டும். இதற்கு முன் ஆளுநராக இருந்தவர், அதிமுக அனுப்பிய நீட்விலக்கு மசோதாவை நீண்ட நாட்கள் கிடப்பில் வைத்திருந்தார். பின், நீதிமன்றம் தலையிட்டது. அதற்குப் பிறகு, இந்த மசோதாவிற்கு முடிவெடுக்கும் உரிமை எனக்கில்லை என்று கூறி குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்துவிட்டார். அதன் பின் தற்போது திமுக ஆட்சிக்கு வந்த போது நிறைவேற்றப்பட்ட தீர்மானம். அது வெறும் தீர்மானமாக வரவில்லை. ஏ.கே.ராஜன் தலைமையில் குழு அமைத்து. 80 ஆயிரம் பேரின் கருத்துக்களை கேட்டறிந்து, தமிழ்நாட்டில் நீட்டினால் என்ன பாதிப்புகள் ஏற்பட்டன என்பதை புள்ளி விவரத்தோடு குறிப்பிட்டு நிறைவேற்றப் பட்ட தீர்மானம். அந்த தீர்மானத்தை ஆளுநர் திருப்பி அனுப்பியிருக்கிறார். எங்களுக்கு சிறப்பு அதிகாரம் இருக்கிறது. எங்கள் மீது வழக்கு போட முடியாது போன்றவற்றைப் பயன்படுத்தி தமிழ்நாட்டு ஆளுநர் தனது அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தி வருகிறார்” என்று குறிப்பிட்டுப் பேசினார்.

முற்றுகைப் போராட்டத்தில், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்ட தலைவர் வேழவேந்தன், மாவட்ட செயலாளர் உமாபதி, கோவை நேருதாஸ், அருண் குமார், கண்ணியப்பன், ராஜேஷ், மனோஜ் உள்ளிட்டத் தோழர்கள் பங்கேற்றனர்.

## காஷ்மீர் உரிமைக்கு குரல் கொடுத்த தமிழ்நாடு

துன்பமான நேரங்களில் தான் உண்மையான நண்பர்கள் யாரென்பதை அறிய முடியும். நண்பர்களாக நாங்கள் யாரை நினைத்தோமோ அவர்கள் ஆகஸ்ட் 05,2019ல் (காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்ட நாள்) எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு வாய் திறக்கவில்லை. ஆனால், தமிழ்நாட்டு மக்கள் எழுப்பிய குரல் காஷ்மீர் வரை எதிரொலித்தது. இதை நாங்கள் எப்போதும் மறக்க மாட்டோம்.

(ஒமர் அப்துல்லா - காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் நூல் வெளியீட்டு விழாவில்)

## நல்ல நடவடிக்கை: பார்ப்பன பயங்கரவாதி கைது



நடந்து முடிந்த உள்ளாட்சி தேர்தலில், சென்னை 134 ஆவது வார்டில் (மேற்கு மாம்பலம்) ஒரே ஒரு பாஜக வேட்பாளர் வெற்றி பெற்றதை ஒட்டி, யு டியூப்(லிபர்டி) சேனல் அந்த வார்டு மக்களிடம் கருத்து கேட்டது. அதில் பேசிய ‘ஈஸ்வர் சந்திரன் சுப்பிரமணியன்’ “பெரியார், அம்பேத்கர், முகமது அலி ஜின்னா ஆகியோரை கோட்சே கொன்றிருக்க வேண்டும். அதற்குப் பிறகு காந்தியைக் கொன்றிருக்க வேண்டும். நான் ஒரு இந்து தீவிரவாதி” என்று பேசியிருந்தார். வன்முறையை தூண்டும் விதத்தில் பேசியவரை சைபர் கிரைம் போலீசார், 28.02.2022 அன்று கைது செய்தனர். வழக்கம் போல், இவர் மனநலம் குன்றியவர் என்ற புரளியை கிளப்பி விட்டார்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 4th March 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN